B&C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர்

* 161 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) B & C மில்லிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் விழுவதுடன் எண்ணூர் பகுதியிலும் செல்வதால் அப்பகுதியிலுள்ள மீன்கள் செத்து விடுகின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக சுற்றுப்புற சூழ்நிலையை சுத்தப்படுத்த மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அறிகிறோம். அப்படி இருக்குமானால் அதன்மூலம் சுற்றுப்புறச் சூழ்நிலையைச் சுத்தப்படுத்த திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காற்றுத் தூய்மை கெடுதல், நீர்த் தூய்மை கெடுதல் ஆகியவற்றைக் கவனிக்க அரசாங்கத்தில் ஒரு குழு இருக்கிறது. நகரில் அதற்குரிய நடவடிக்கைகள் முடிந்த அளவுக்கு நிறைவேற்றப் படுகின்றன. பி. அண்டு சி. மில்லில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் கூவம் ஆற்றில் கலக்கப்படுகிறதா என்பது கேள்வி. அதுதான் இல்லை என்று சொன்னேன். கார்ப்பரேஷன் சூவேஜிலும், பக்கிங்ஹாம் கால்வாயிலும்தான் கலக்கப்படுகிறது.

திருச்சி டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்ஸிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்

* 162. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள 'டிஸ்ட்லரீஸ் அண்ட் கெமிகல்ஸ்' தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளினால் தண்ணீரும் காற்றும் அசுத்தப்படுவதைத் தவிர்ப்பதற்கான திட்டம் ஏதேனும் மாவட்ட ஆட்சியாளரால் அண்மையில் அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?